**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | **வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள்** | |
| | 1) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 40 மீனாட்சிபுரம் மேற்கு பகுதியில் அமைந்துள்ள "கோவல் டிரஸ்ட்க்கு" சொந்தமான அரவிந்த் கண் மருத்துவமனை இயங்கி வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு எட்டு வரிவிதிப்புகள் செய்யப்பட்டு தனித்தனியே கதவிலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் மேற்படி கட்டிடங்கள் இந்நிறுவனத்தின் செவிலியர் பயிற்சியாளர்கள் தங்கும் விடுதிகளாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், மேற்படி தங்கும் விடுதிகளுக்கு செவிலியர் பயிற்சியாளர்களிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லையென மேற்படி நிறுவனத்தின் தலைவர் சார்பில் தெரிவிக்கப்பட்டு மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கக் கோரப்பட்டுள்ளது.<br>மேற்படி நிறுவனம் சார்பில் வணிக நோக்கமின்றி பொதுமக்களின் மருத்துவ சேவைக்காக இந்நிறுவன செவிலியர் பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி வகைக்காக கட்டணம் வசூலிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி கட்டிடங்களுக்கான சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கவும், எதிர்வரும் காலத்தில் மேற்படி கட்டிடம் தொடர்பாக தணிக்கையில் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனம் பொறுப்பேற்க வேண்டும், மாமன்ற உறுப்பினர்களை சாராது என்ற நிபந்தனையின்கீழ் சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க மாமன்றம் தீர்மானிக்க. | 1) பொருளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையின் கீழ் மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பாளைரோடு பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு வேம்படி இசக்கியம்மன் கோவிலானது நம் மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற பிராத்தனை ஸ்தலங்களுள் சிறப்பு வாய்ந்ததாக திகழ்ந்து வருகிறது. திருவிழாக்காலங்களில் வெளி மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் இத்திருக்கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர். தற்போது மேற்படி கோவிலானது தற்காலிக கீற்றுக்கொட்டகையின் கீழ் அமைந்துள்ளது. எனவே தூத்துக்குடி மாநகராட்சிக்குச் சொந்தமான பூங்காவிற்கு அருகில் (எம்.ஜி.ஆர். பூங்கா) உள்ள காலி இடத்தில் இத்திருக்கோவிலினை அமைப்பதற்கு நிலம் வழங்குமாறு அருள்மிகு வேம்படி இசக்கியம்மன் திருக்கோவில் செயல் அலுவலர் மற்றும் தக்காரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது. | 2) பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, அருள்மிகு வேம்படி இசக்கியம்மன் திருக்கோவில் நிறுவுவதற்கு மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தினை திருக்கோவில் |

| | | |
|---|---|---|
| | இந்நிலையில் மேற்படி திருக்கோவில் பழமை வாய்ந்ததாகவும், இக்கோவில் மூலம் இலட்சக்கணக்கான பொதுமக்கள், பக்தர்கள் என பல்வேறு தரப்பினரும் சுவாமியை தரிசிக்க வருகை தரும் ஸ்தலமாகவும் இருந்து வருவதால் தூத்துக்குடி கொல்லம் நெடுஞ்சாலை வடபுறம் , பாளையங்கோட்டை ரோடு, ஆயுத காவல் படை பயிற்சி கூடம் செல்லும் சாலை சந்திக்கும் இடத்தில் அதாவது எம்.ஜி.ஆர். பூங்காவில் மேற்கு பக்கம் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பூங்காவின் நடைபாதைகளை ஒழுங்குபடுத்தி மேற்படி திருக்கோவில் நிறுவுவதற்கு மேற்படி திருக்கோவில் நிர்வாகிகள் நேரில் தெரிவித்ததின் பேரில் மேற்படி மாநகராட்சி இடத்தினை திருக்கோவில் பெயரில் மாற்றம் செய்து வழங்க மாமன்றம் தீர்மானிக்க. | பெயருக்கு மாற்றம் செய்து வழங்க தீர்மானிக்கப்பட்டது. |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23 கதவு எண் 72 டேவிஸ்புரம் ரோடு பகுதியில் அமைந்துள்ள திருமண மண்டபம் டிரஸ்ட் நிறுவன பயன்பாட்டிற்கான ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக மருத்துவம் மற்றும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் மட்டுமே நடத்தப்பட்டு வருவதால் மேற்படி கட்டிடத்திற்கான சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க மேற்படி நிறுவனத்தாரால் கோரப்பட்டுள்ளது.<br>மேற்படி டிரஸ்ட் மூலம் ஏழை, எளிய மக்களின் திருமண நிகழ்ச்சிகளுக்கு இலவசமாகவும், மருத்துவம் மற்றும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை எனவும் மேற்படி நிறுவனத்தாரால் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க மாமன்றம் தீர்மானிக்க. | 3) பொருளில் குறிப்பிட்டுள்ள திருமண மண்டபத்திற்கு சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. |
| | 4) மாமன்ற உறுப்பினர் திரு.வீரபாகு மற்றும் ஏனைய மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த வேண்டுகோளின் படி தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் வாழும் ஏழை எளிய இளைஞர்களுக்கு இலவசமாக கணினி பயிற்சி சிறப்பான முறையில் வழங்கும் பொருட்டு SJSRY திட்டத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் STEP-UP பயிற்சியின் வாயிலாக 7500 நபர்களுக்கு CMTES Informatics(p) Ltd நிறுவனத்தினரால் கணினி பயிற்சி அளிப்பதற்கு அனுமதி வழங்க மாமன்றம் தீர்மானிக்க. | 4) பொருளில் குறிப்பிட்டுள்ள நிறுவனம் மூலம் 7500 நபர்களுக்கு கணினி பயிற்சி அளிப்பதற்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எ.ண். 14ல் அமைந்துள்ள முனியசாமிகோவில் தெரு மற்றும் முகமது சாதலிபுரம் ஆகிய பகுதிகளுக்கு சிமெண்ட் சாலை அமைக்க மாமன்றம் தீர்மானிக்க. | 5) பொருளில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டது |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 கிருஷ்ணராஜபுரம் 7, 8 மற்றும் 9 தெருக்களில் கழிவுநீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு பம்பிங்ஸ்டேசனுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைப்பதற்கு மாமன்றம் தீர்மானிக்க. | 6) பொருளில் குறிப்பிட்டுள்ள மழைநீர் வடிகால் அமைக்க தீர்மானிக்கப்பட்டது |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 சுந்தரவேல்புரம் 6, 7 8 மற்றும் 9ஆகிய தெருக்களில் குடிநீர் விநியோகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் நலன் கருதி குடிநீர் வால்வுகள் அமைத்து சீரான குடிநீர் விநியோகம் செய்ய பணிகள் மேற்கொள்ள மாமன்றம் தீர்மானிக்க. | 7) பொருளில் குறிப்பிட்டுள்ள குடிநீர் வால்வுகள் அமைக்க தீர்மானிக்கப்பட்டது |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.43 பிரையண்ட் நகர் 6 தெரு (மேற்கு) மற்றும் பிரையண்ட்நகர் 3 தெரு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படுவதால் மேற்படி பகுதிகளில் தார்சாலை அமைக்க பணிகள் மேற்கொள்ள மாமன்றம் தீர்மானிக்க. | 8) பொருளில் குறிப்பிட்டுள்ள குடிநீர் வால்வுகள் அமைக்க |

<table>
<tr><td></td><td></td><td>தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>22.01.14</td><td>1. தூத்துக்குடி மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.04.2013ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு. வி.ஆனந்த் என்பவருக்கு அவர் பணிபுரிந்த காலத்தில் அன்னாரது ஊதியத்தில் மாதம்தோறும் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகைக்குரிய வட்டி மற்றும் மான்யத் தொகை கீழ்க்கண்ட விபரப்படி அன்னாருக்கு வழங்கப்பட வேண்டியது உள்ளது.<br><br><u>1) சிறப்பு சேமநலநிதி வட்டித் தொகை</u><br><br>01.08.1989 முதல் 30.04.2013 வரை – ரூ. 8994/–<br><br><u>2) சிறப்பு சேமநலநிதி மான்யத் தொகை</u><br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை அரசாணை (பத்தாண்டு) எண் 340 நாள் 08.08.2008ன்படி – ரூ. 10000/–<br>-----------<br>ரூ. 18994/–<br>-----------<br><br>வட்டி மற்றும் மான்யத் தொகை ரூ.18994/– (ரூபாய் பதினெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்றி நான்கு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு:</u> அனுமதிக்கலாம்.<br>சி2/4205/2013</td><td>9) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>2. இம்மாநகராட்சியின் 2013–2014ஆம் ஆண்டுக்கு தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 17 பணிகளுக்கு ரூ.141.40 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2/3980/2013, நாள் 18.09.2013இல் தார்சாலை, பேவர் பிளாக் அமைத்தல், பூங்கா அமைத்தல், வடிகால் அமைக்கும் பணி, நியாயவிலை கடை மற்றும் அங்கன்வாடி மையம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு பின்வருமாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணிகளின் விபரம்</th><th>நிர்வாக அனுமதி வழங்கப் பட்ட நாள்</th><th>சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி (ரூ.இலட்சத்தில்)</th><th>மாநகராட்சி பொது நிதி (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>தூத்துக்குடி மாநகராட்சி 48வது வார்டு திரு.வி.க. நகரில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி</td><td rowspan="3">18.09.13</td><td>5.25</td><td>1.35</td></tr>
<tr><td>2.</td><td>தூத்துக்குடி மாநகராட்சி 48வது வார்டு திரு.வி.க. நகர் மற்றும் இந்திரா நகரில் தார்சாலை அமைக்கும் பணி</td><td>10.00</td><td>2.00</td></tr>
<tr><td>3.</td><td>தூத்துக்குடி மாநகராட்சி 54வது வார்டு சுந்தரம் நகர் 1வது தெரு டவர்லைன் சாலை பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி</td><td>10.00</td><td>0.00</td></tr>
</table></td><td>10) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | தூத்துக்குடி மாநகராட்சி 44வது வார்டு மாசிலாமணிபுரம் பூங்காவில் நடைமேடை கட்டும் பணி | | 20.00 | 0.00 |
| 5. | தூத்துக்குடி மாநகராட்சி 49வது வார்டு கால்டுவெல் காலனி பூங்காவில் நடைமேடை கட்டும் பணி | | 8.00 | 0.00 |
| 6. | தூத்துக்குடி மாநகராட்சி 9வது வார்டு அழகேசபுரத்தில் ரேசன் கடை கட்டும் பணி | | 5.25 | 0.40 |
| 7. | தூத்துக்குடி மாநகராட்சி 9வது வார்டு கந்தசாமிபுரத்தில் ரேசன் கடை கட்டும் பணி | | 5.25 | 0.40 |
| 8. | தூத்துக்குடி மாநகராட்சி 27வது வார்டு ஜெயிலானித் தெருவில் ரேசன் கடை கட்டும் பணி | | 5.25 | 0.40 |
| 9. | தூத்துக்குடி மாநகராட்சி 35வது வார்டு சின்னமணி நகர் பகுதியில் ரேசன் கடை கட்டும் பணி | | 5.25 | 0.40 |
| 10. | தூத்துக்குடி மாநகராட்சி 42வது வார்டு சிதம்பரநகர் பகுதியில் ரேசன் கடை கட்டும் பணி | | 5.25 | 0.40 |
| 11. | தூத்துக்குடி மாநகராட்சி 48வது வார்டு திரு.வி.க. நகரில் ரேசன் கடை கட்டும் பணி | | 5.25 | 0.40 |
| 12. | தூத்துக்குடி மாநகராட்சி 19வது வார்டு பூபாலராயர்புரம், சாமுவேல்புரம் பகுதியில் வடிகால் கட்டும் பணி | | 8.00 | 0.00 |
| 13. | தூத்துக்குடி மாநகராட்சி 26வது வார்டு சிவன்கோவில் முன்புறம் தெருவில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | | 10.00 | 4.10 |
| 14. | தூத்துக்குடி மாநகராட்சி 41வது வார்டு அண்ணாநகர் 1வது தெருவில் (சலவைத் தொழிலாளர் காலனி) தார்சாலை அமைக்கும் பணி | | 8.55 | 0.00 |
| 15. | தூத்துக்குடி மாநகராட்சி 41வது வார்டு அண்ணாநகர் 1வது தெருவில் (சலவை தொழிலாளர் காலனி) வடிகால் கட்டும் பணி | | 5.00 | 0.00 |
| 16. | தூத்துக்குடி மாநகராட்சி 41வது வார்டு பூ மாக்கெட் தெருவில் (சலவை தொழிலாளர் காலனி) வடிகால் கட்டும் பணி | | 10.00 | 1.00 |
| 17. | தூத்துக்குடி மாநகராட்சி 42வது வார்டு அம்மன்கோவில் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | | 4.00 | 0.25 |
| | **மொத்தம்** | | **130.30** | **11.10** |

எனவே மேற்கண்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 17 பணிகளை ரூ.141.40 இலட்சம் மதிப்பீட்டில் செய்யவும், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள 11 பணிகளில் கூடுதல் செலவினத் தொகை ரூ.11.10 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செய்யவும் மாமன் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம். மேலும் கூடுதல் செலவினம் பொதுநிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br>இ1/7352/2013 | |
| | 3. இம்மாநகராட்சிக்கு 2013–2014ஆம் ஆண்டுக்கு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 35, சின்னமணிநகர் பகுதியில் பூங்கா மற்றும் சமுதாய நலக்கூடம் உள்ள இடத்தில் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2/2067/2013இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ1/6202/2013 | 11) பதிவு செய்யப்பட்டது |
| | 4. தூத்துக்குடி மாநகராட்சியில் ஆறு மாதங்களுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்களில் ஏற்கனவே நகராட்சியாக செயல்பட்ட போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் கீழ்க்கண்ட 91 பணியிடங்களை பூர்த்தி செய்ய அனுமதி அளித்து அரசாணை (நிலை) எண் 201, நாள் 23.12.2013ன் அரசாணை வரப்பெற்றுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1) நிர்வாக அலுவலர் – 1 பணியிடம்<br>2) உதவி வருவாய் அலுவலர் – 1 பணியிடம்<br>3) உதவியாளர் – 4 பணியிடம்<br>4) இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் – 6 பணியிடம்<br>5) வரி வசூலிப்பவர் – 2 பணியிடம்<br>6) கன்சர்வன்சி ஆய்வாளர் – 11 பணியிடம்<br>7) கன்சர்வன்சி மேற்பார்வையாளர் – 25 பணியிடம்<br>8) இளநிலைப்பொறியாளர் – 2 பணியிடம்<br>9) மருத்துவ அலுவலர் – 1 பணியிடம்<br>10) பகுதி சுகாதார செவிலியர் – 1 பணியிடம்<br>11) நகர சுகாதார செவிலியர் – 17 பணியிடம்<br>12) பெண் உதவியாளர் – 1 பணியிடம்<br>13) துலக்குநர் (வாகனம்) – 4 பணியிடம்<br>14) செயல்திறன் உதவியாளர் நிலை 1 – 4 பணியிடம்<br>15) செயல்திறன் உதவியாளர் நிலை 2 – 11 பணியிடம்<br>––––––––––––<br>மொத்தம் – 91 பணியிடம்<br>––––––––––––<br>சி1/21375/2008 | 12) பதிவு செய்யப்பட்டது |
| | 5. தூத்துக்குடி மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு (கணேசன் நகர்) சர்வே வார்டு சி, பிளாக் 49, புல எண். 33/3 பகுதியில் அமையும் 487.48ச.மீ. பரப்பளவுள்ள மனையானது மனை மனைப்பிரிவு எண். L.P./D.T.P.NO. 09/68 பள்ளிக்கூட உபயோக பயன்பாட்டில் அமைகிறது. மேற்படி பள்ளிக்கூட உபயோக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நில பயன்பாட்டை மாற்றம் செய்ய அனுமதிகோரியும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு உரிய வழிமுறைகளின்படி இவ்வலுவலகத்திலிருந்து பரிந்துரை செய்யக்கோரியும் திருமதி ஆர். மீனா என்பவரிடம் இருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட பள்ளிக்கூட உபயோக பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடம் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. மேற்படி மனையில் அதிகமாக குடியிருப்பு கட்டிடங்கள் | 13) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அமைந்துள்ளபடியாலும் மேற்படி மனையில் அமைந்துள்ள பள்ளிக்கூட உபயோக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யவும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய வழிமுறையின்படி இவ்வலுவலக வாயிலாக மேலனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்5/5497/2013 | |
| 6. | தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாகவும், அச்சுறுத்தலாகவும் ஆபத்து விளைவிக்கும் வகையில் சாலைகள் மற்றும் பொது இடங்களில் சுற்றித்திரிகின்ற ஆடுகள், மாடுகள் அவ்வப்போது பிடிக்கப்பட்டு, உரிமையாளர்கள் உரிமை கோரினால் தக்க அபராதம் விதிக்கப்பட்டு திரும்ப ஒப்படைப்பு செய்யப்படுகிறது. ஒரு வார காலத்திற்குள் உரிமை கோரப்படாத ஆடுகள், மாடுகள் மாநகராட்சி நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள பாரத பிராணிகள் நல வாரியத்தில் அங்கீகாரம் பெற்ற அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யப்படுகிறது.<br><br>இந்நிகழ்வில் மாநகராட்சி பணியாளர்களால் பிடித்தம் செய்யப்படும் ஆடுகள் மற்றும் மாடுகளை பராமரிக்க போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் பிடிக்கப்படும் ஒவ்வொரு ஆட்டிற்கும் ரூ.1000/– வீதமும், ஒவ்வொரு மாட்டிற்கும் ரூ.5000/– வீதமும் கன்று ஒன்றுக்கு ரூ.2000/– வீதமும் அபராத கட்டணத்துடன் பிடிக்கப்பட்ட நாள் முதல் மாநகராட்சி பணியாளர்களால் பராமரிக்கப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஆடு ஒன்றுக்கு ரூ.100/–ம் மாடு ஒன்றுக்கு ரூ.200/–ம் கன்று ஒன்றுக்கு ரூ.100/–ம் பராமரிப்பு கட்டணமாக வசூல் செய்யவும், மூன்று நாட்களுக்குள் உரிமை கோரப்படாத மற்றும் அபராதம் பராமரிப்பு கட்டணம் செலுத்த முன் வராத ஆடுகள், மாடுகள் கன்றுகளை பாரத பிராணி நலவாரியத்தில் அங்கீகாரம் பெற்ற அமைப்பான குலசேகரபட்டிணம் முத்தாரம்மன் கோசாலை வசம் ஒப்படைப்பு செய்யவும்,<br><br>மேற்படி நடைமுறைகளின்படி பிடிக்கப்படும் ஆடுகள், மாடுகள், கன்றுகள் கோசலை வசம் ஒப்படைப்பு செய்வதற்கு முன் அபராதம் செலுத்தி மீட்கப்படும் பட்சத்தில் மீண்டும் சாலைகளில் திரியவிடக்கூடாது எனவும், மறுமுறை இருமடங்கு அபராத கட்டணம், அதாவது ஆடு ஒன்றுக்கு ரூ.2000/–ம், மாடு ஒன்றுக்கு ரூ.10000/–ம், கன்று ஒன்றுக்கு ரூ.4000/– வீதம் அபராதமும் ஏற்புடைய பராமரிப்பு கட்டணம் வசூல் செய்யப்படும். இந்நிகழ்வே மூன்றாவது முறையாக இருப்பின் ஆடு, மாடு மற்றும் கன்றுகளை திரும்ப வழங்க இயலாது எனவும் நேரடியாக கோசலை வசம் ஒப்படைப்பு செய்யப்படும்.<br><br>மேலும், ஆடுகள், மாடுகள் மற்றும் கன்றுகளை பிடிக்கும் பொழுதோ, பராமரிப்பின் போதோ, நோயின் காரணமாகவோ விஷ சந்துக்களாளோ, இயற்கையின் சீற்றம் மற்றும் எதிர்பாராத விதமாக நிகழும் சம்பவங்களால் இறக்க நேரிடின் மாநகராட்சி நிர்வகமோ, பணியாளர்களோ எவ்வித பொறுப்பிற்கும் உடபடுத்த இயலாது. மாறாக உரிய முறையில் அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.<br>எச்4/15232/2011 | 14) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

7. இம்மாநகராட்சியில் JICA நிதி உதவியுடன், 282.44 கோடி மதிப்பீட்டில், செயல்படுத்தப்படவுள்ள குடிநீர் திட்டப்பணியில், மேற்படி திட்டப்பணிகளில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு “Third party Inspection” பெறுவதற்கு, ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப ஆவணம் “Volume I General Specification special conditions of contract Item (E)ன்படி மேற்படி Third Party Inspection நிறுவனத்தை முடிவு செய்ய கூறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி நிறுவனத்தை தேர்வு செய்ய 30.10.2013 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் 1) SGS India Private Ltd. Chennai, 2) Rites Ltd. Chennai, 3) Dr.Amin controllers Pvt. Ltd., Mumbai, 4) Certification of Engineer International Ltd., Mumbai 5) Bureau veritas (India) Pvt. Ltd., Mumbai, 6) Wapcos Limited, Chennai, 7) Mody International Pvt. Ltd., Chennai 8) Dash International Pvt. Ltd., Gujarat 9) Indian Register of Shipping ஆகிய 9 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அவற்றில் தொழில்நுட்ப தகுதியுடைய கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளிகள் 22.11.2013 அன்று திறக்க முடிவு செய்யப்பட்டது.

1) M/s. SGS India Pvt. Ltd., Chennai
2) Dr. Amin Control pvt., Ltd., Chennai

மேற்படி இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் 22.11.2013 அன்று திறக்கப்பட்ட போது, மேற்படி Dr.Amin Control Pvt., Ltd., சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளி Online-ல் விபரம் ஏதும் இல்லாத காரணத்தினால் மேற்படி தேதியில் கோரப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்பட்டு, 13.12.2013 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி இரண்டாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்காணும் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1) M/s. SGS India Pvt. Ltd., Chennai
2) Dr. Amin Control pvt., Ltd., Mumbai
3) Rites Ltd. Chennai
4) Certification of Engineer International Ltd., Mumbai
5) Indian Register of Shipping, Mumbai

ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியுடைய கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தபுள்ளிகளின் விலைப்புள்ளிகள் 23.12.2013 அன்று திறக்கப்பட்டது. அதன் ஒப்பு நோக்குப்பட்டியல்

1) M/s. SGS India Pvt. Ltd., Chennai
2) M/s. Dr. Amin Control pvt., Ltd., Chennai
3) M/s. Rites India Pvt. Ltd. Chennai

| Description of item | Rate quoted by **SGS India Private Ltd Plot No 28 B/1(SP) & 28 B/2 (SP), II Main Road, Ambattur** | Rate quoted by **Dr. Amin Controllers Pvt.Ltd Embassy Chambers, 6** | Rate quoted by **RITES Limited Quality Assurance Division, Southern** |
|---|---|---|---|

**15)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | **Industrial estate, Ambattur, Chennai – 600 058** | **th Floor, Plot No 5, Road No 3, Khar (West) Mumbai – 400052, India.** | **Region "Mount Chambers", 4th Floor, 758-Anna Salai, Chennai – 600002** |
|---|---|---|---|
| | % of rate | % of rate | % of rate |
| upto 100 Lakhs | 0.55 | 0.37 | 0.4 |
| Above 100 Lakhs and upto 300 Lakhs | 0.46 | 0.35 | 0.35 |
| Above 300 Lakhs | 0.36 | 0.32 | 0.3 |

மேற்படி பணியில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் விலை குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. Rites India Pvt. Ltd. Chennai (Schedule A மத்திய அரசு நிறுவனம்) நிறுவனத்தினரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 27.12.2013 அன்று கடிதம் மூலம் கீழ்கண்ட விவரப்படி விலைக்குறைப்பு கொடுத்துள்ளார்.

| Sl. No | Description of item | Rate quoted by **RITES Limited Quality Assurance Division, Southern Region "Mount Chambers", 4th Floor, 758-Anna Salai, Chennai – 600002** |
|---|---|---|
| | | % of rate |
| I | upto 100 Lakhs | 0.36 |
| II | Above 100 Lakhs and upto 300 Lakhs | 0.32 |
| III | Above 300 Lakhs | 0.28 |

மேற்படி விலைக்குறைப்பு செய்து M/s. Rites India Pvt. Ltd. Chennai (Schedule A மத்திய அரசு நிறுவனம்) நிறுவனத்தினர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மேற்படி பணி குடிநீர் திட்டப்பணியாகவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு திட்டப் பணியாக இருப்பதாலும், மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Rites Ltd., Chennai நிறுவனம் மத்திய அரசின் Schedule A நிறுவனமாக இருப்பதாலும், மேலும் மதிப்பீட்டு தொகையை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும், மாமன்றம் மேற்படி பணியின் அவசரத்தை கருதி மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினத்தை குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிக்கு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி தொகைக்குள் மேற்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| | 8. தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை குப்பைகளை கையாளுதல் தனியார் மயமாக்குதல் Package-IIIல் வார்டு எண் 12 பகுதி, 21 பகுதி, 24 பகுதி, 26 பகுதி 40 மற்றும் 41 ஆகிய வார்டுகளில் M/s.Our Land Engineering Works, தூத்துக்குடி நிறுவனத்தினர் துப்புரவு பணி மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவு 19.04.2014ல் முடிவடைய உள்ளது.<br><br>எனவே ஏற்கனவே 10.10.2013ல் முடிவடைந்த ஒப்பந்தகாரர் திருமதி. S.K.செல்வி அவர்களுக்கு வார்டு 12 பகுதி மற்றும் 21 பகுதி ஆகியவையும் ஒப்பந்தகாரர் திருமதி. A.விக்டோரியா அவர்களுக்கு வார்டு 24 பகுதி மற்றும் 26 பகுதி ஆகியவை முடிவடைந்து தற்போது கால நீட்டிப்பு செய்து பணி நடைபெற்று வருகின்றது.<br><br>மேற்படி வார்டுகளை 12 பகுதி, 21 பகுதி, 24 பகுதி மற்றும் 26 பகுதி சேர்த்து புதிதாக வார்டு எண் 12, 21, 24, 26, 40 மற்றும் 41 ஆகிய வார்டுகளையும் முழுமையாக ஒருங்கிணைத்து தனியார் திடக்கழிவுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/096/2014 | 16) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 9. தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை குப்பைகளை கையாளுதல் தனியார் மயமாக்குதல் பேக்கேஸ்-IIIக்குட்பட்ட வார்டு எண் 40, 41, 12 பகுதி, 21 பகுதி, 24 பகுதி மற்றும் 26 பகுதி ஆகிய வார்டுகளில் M/s.Our Land Engineering Works, தூத்துக்குடி நிறுவனத்தினர் துப்புரவு பணி மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி பணிக்கு மன்ற பொருள் எண் 211 நாள் 26.09.2012ல் ரூ.81 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>ஆனால் இப்பணிக்கு மதிப்பீடு தயார் செய்யும் போது மாநகரின் பிரதான பொது ஸ்தலங்களான பழைய பேருந்து நிலையம், மாநகராட்சி அலுவலகம், மார்க்கெட் பகுதி, மாவட்ட கல்வி அலுவலர் வளாகம், மாவட்ட கால்நடை மருத்துவமனை, ராஜாஜி பூங்கா, நீதிமன்ற வளாகம், தெற்கு காவல் நிலையம், பூ மார்க்கெட் போன்றவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாததோடு, மக்கள் அதிக நடமாட்டம் உள்ள பிரதான வணிக பகுதிகளான பாளைரோடு, W.G.C. ரோடு, V.E.ரோடு, பாலவிநாயகர் கோவில் தெரு, கடற்கரை பகுதிகள், மீன்வள அலுவலகம் போன்றவை மேற்படி வார்டுகளில் அமைந்திருப்பதால் சேகரமாகும் குப்பைகளின் அளவு மதிப்பீடு செய்யும் போது குறிப்பிடப்பட்டுள்ள அளவான ஒரு நாளுக்கு 22.73 டன்னுக்கு மாறாக 40 முதல் 42 டன் வரையில் சேகரமாகிறது என்பதை 15 நாட்களுக்கு GPS கருவி பொருத்தி கண்காணித்தல் மூலம் உறுதி செய்யப்படுகிறது. எனவே மேற்படி பணிக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட உத்திரவில் மீதமுள்ள மாதங்களுக்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.79,50,510/—க்கு மாமன்ற அனுமதி வழங்க வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/18432/2012 | 17) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10. தூத்துக்குடி மாநகராட்சி, வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகருக்கு குடிநீர் வரும் 600, 500 மற்றும் 400mm PSC குழாய்களில், வாகைக்குளம், பொட்டலூரணி, புதுக்கோட்டை மற்றும் கோரம்பள்ளம் பகுதிகளில் மேற்படி குடிநீர் குழாய்களில் கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாவதை சரிசெய்து குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.1,13,260/— செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண் 145A/13—14 | 18) பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 11. நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பேருந்து நிலையங்களில் நூல்கள் விற்பனைக்கு இரண்டு பெட்டிக்கடைகள் ஒதுக்கீடு செய்ய அரசாணை (உ.ப) எண் 120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 10.07.2007 மற்றும் அரசாணை (உ.ப) எண் 64 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.05.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பெட்டிக்கடைகளுக்கு மாத வாடகை ரூ.200/– அல்லது அப்பகுதியில் நிலவும் உயர்ந்த குத்தகை தொகையில் நான்கில் ஒரு பங்கு இவற்றில் எது குறைவோ அதனை பொது ஏலம் தவிர்த்து நிர்ணயம் செய்யவும், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை எனினும் அங்கீகரிக்கப்பட்ட புத்தக கடை விற்பனையாளர்கள்/விநியோகஸ்தர்கள் ஆகியோரும் தனி நபர்களை விட முன்னுரிமை வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இவ்வாறு பொது ஏலம் தவிர்த்து நூல்கள் விற்பனைக்கு என ஒதுக்கப்படும் கடைகளில் தமிழ் நூல்கள் தவிர வேறு நூல்களை விற்பனை செய்யக்கூடாது எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் பெட்டிக்கடையை உரிமம் பெற்றவரே தன்னுடைய சொந்த செலவில் கடையை நிர்மானித்துக் கொள்ளவும் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>இதன்படி இம்மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் நூல்கள் விற்பனை செய்ய கடை ஒதுக்கீடு செய்யக்கோரி திரு. மு.லெட்சுமணன் என்பவர் விண்ணப்பித்துள்ளார். எனவே விண்ணப்பித்துள்ள திரு.லெட்சுமணன் என்பவருக்கு உயர்நீதிமன்ற உத்திரவின்படியும் அரசாணையின்படியும் நிபந்தனைகளுக்குட்பட்டு 8 x 8 கடை அமைத்துக்கொள்ள இடம் ஒதுக்கீடு செய்து உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br><br>1) பொதுமக்களுக்கு தமிழ் நூல் படிக்கும் பழக்கத்தை அதிகரிக்கவும் நூல்களின் விற்பனையை அதிகரிக்கவும் வேறு நபர்கள் இதுவரை விண்ணப்பம் ஏதும் செய்யப்படாததாலும்,அரசாணைகளின்படி நிபந்தனை–களுக்கு உட்பட்டு நூல்கள் விற்பனை கடைகள் ஒதுக்கீடு செய்து உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பழைய பேருந்து நிலையம் மேல்புறம் திருநெல்வேலி லாலா மிட்டாய் கடைக்கு வடபுறம் காலியாக உள்ள இடத்தில் 8x8 கடை அரசாணையின்படி அமைத்துக்கொள்ளலாம்.<br><br>அ16/13149/2009 | 19) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 12) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் சேகரமாகும் கழிவுநீரின் மூலமாக (Liqud waste) GAS தயாரிப்பதற்கு கீழ்க்கண்ட இடங்களில் பணி செய்வதற்கு அதற்கு உரிய உத்தேச செலவினத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேற்கண்ட பணி குப்பைகள் சேகரிக்கும் இடத்தில் உள்ள தருவைகுளத்தில் அமைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. 400M3 BioGas plant from waste water treatment அமைக்கும் பணிக்கு உரிய உத்தேச செலவினம் ரூபாய் 24.50 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேற்கண்ட இடத்தில் bottling plant set up for vehicle running அமைக்கும் பணிக்கு உரிய உத்தேச செலவினம் ரூபாய் 7.60 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>இ5/12441/2012 | 20) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 13) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பையோ மேறத்தினேசன் பிளான்ட் அமைப்பதற்கு மன்றம் தனது தீர்மானம் எண். 210 நாள் 30.12.2013ம் தேதியில் ரூ. 100.00 லட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் முதல் கட்டணமாக கீழ்க்கண்ட இடங்களில் 2 இடங்களில் பையோமெத்தினேசன் பிளானட் அமைப்பதற்கு அதற்குரிய பணியினை மத்திய அரசின் நிறுவனமான BARC MUMBAI நிறுவனம் மூலமாக பையோ மெத்தினேசன் Project for processing BIO DEGRADABLE Waste in to methane Gas plant அமைக்கும் பணியினை நேரடியாக வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1) ஸ்டேட்பாங்க் காலனி பூங்கா பகுதியில் 2 மெட்ரிக்டன் கொள்ளவு உள்ள GAS PLANT மூலமாக மின்சாரம் தயாரிக்கும் பணி<br>2) குருஸ்புரம் அம்மா உணவகம் அருகில் உள்ள காலியான இடத்தில் 1 மெட்ரிக் டன் கொள்ளவு உள்ள GAS PLANT மூலமாக Gas தயாரித்து அருகில் உள்ள அம்மா உணவகத்திற்கு வழங்கும் பணி.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ5/455/2014 | 21) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 14) இம்மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம்(IUDM) 2013.2014 இன் கீழ் தார் சாலை, சிமெண்ட் சாலை,அமைத்தல் மழைநீர் வடிகால், மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மாமன்றம் தனது தீர்மானம் எண்,131, நாள் 24–07–2013 இல் 428.65 கோடி மதிப்பீட்டில் பணிகள் செய்ய அனுமதி அளித்துள்ளது.<br><br>இந்நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்துறை(மாந2) அரசாணை (டி) எண்.492, நாள் 19–09–2013 இல் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம்(IUDM) 2013.2014 இன் கீழ் நான்கு சிப்பங்களாக பணிகள் பிரித்து 272.85 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளது. அதில் IUDM பஙகுத்தொகையாக ரூ.229.16 கோடியும், மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.43.69 கோடியும் செலவினம் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது.<br><br>மேலும் 6வது திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்பு குழு கூட்ட நடவடிக்கைகளில் இம்மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கு(4வதுகுடிநீர்திட்டம)IUDM–2013–2014இல் பஙகுத்தொகையாக ரூ.20.00 கோடியும், பாதாள சாக்கடை திட்டத்திற்கு IUDM –2013–2014 இல் பஙகுத்தொகையாக ரூ.10.00 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.<br><br>எனவே வரப்பெற்ற 6வது திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்பு குழு கூட்ட நடவடிக்கைகள், மற்றும் அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட திட்டப்பணிகளில் மேற்கொள்ளப்படும் கூடுதல் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அ லுவலகக்குறிப்பு</u>** 1) 6வது திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்பு குழு கூட்ட நடவடிக்கைகள், மற்றும் அரசாணை மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி திட்டப்பணியில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>இ1 / 962 /2013 | 22) அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 15) இம்மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகள் லயன்ஸ்டவுண், பழைய பேருந்து நிலையம், பண்டாரம்பட்டி, திரேஸ்புரம், மேட்டுபட்டி, ஸ்டேட்பாங்க் காலனி, முத்தையாபுரம், தனசேகரன் நகர், புதிய பேருந்து நிலையம், போல்டன்புரம் ஆகிய 10 இடங்களில் ஒருங்கிணைந்த கழிப்பறை (Namma Toilet) அமைக்கும் பணிக்கு 27.12.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இதில் M/s.Urban Industries Limited சென்னை மற்றும் M/s.Core Tech.Glass Composites (P) Ltd., Chennai அவர்கள் தொழில்நுட்ப ரீதியாக தகுதியுள்ளவர்கள் என தீர்மானிக்கப்பட்டு விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1) M/s. Urban Industries Limited, Chennai. — மதிப்பீட்டை விட 11.69% அதிகம் (ரூ. 98,56,250/அதிகம்<br>2) M/s. Core tech. Glass Composites(P), Ltd.Chennai. — மதிப்பீட்டை விட 8.95% குறைவு (ரூ. 9614785/–)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள M/s. Core tech. Glass Composites(P) Ltd., சென்னை (மதிப்பீட்டை விட 8.95% அதிகம்) அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.98% அதிகம்) கொடுத்துள்ளார். மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. பொறியியல் கையேடு Chapter II எண் 2.7.2ன்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு அனுமதிக்கலாம்.<br>2. மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். கூடுதல் செலவினம் பொது நிதியில் செலவு செய்யலாம்.<br>மதிப்பீடு தொகை – 89.00 இலட்சம்<br><br>ம.ப.எண். 181/13–14 | 23) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 16) இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட செல்வநாயகபுரம் பகுதியில் துப்புரவுப் பணியாளர் குடியிருப்பு கட்டும் இரண்டாம் கட்ட பணி உள்கட்டமைப்பு ஈடு செய் நிதி திட்டம் 2013–2014ல் ப.ணி யெய்ய 27–12–2013 அன்று மூன்றாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரேஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டது. வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டது. உரிய ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் தொழில்நுட்ப குழுவிற்கு பொருள் வைத்து தொழில் நுட்ப ரீதியாக தகுதியுள்ளவர் என தீர்மானிக்கப்பட்டு விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1) திரு.ஆல்வின், ஒப்பந்தக்காரர் தூத்துக்குடி. — மதிப்பீட்டை விட 7.68% அதிகம் ரூ. 9302015/–<br><br>வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதால் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.98 % அதிகம் கொடுத்து்.ளார். மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. பொறியியல் கையேடு Chapter II எண் 2.7.2ன்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு அனுமதிக்கலாம்.<br>2. மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். கூடுதல் செலவினம் பொது நிதியில் செலவு செய்யலாம்.<br><br>இ1/2087/2013 | 24) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 17) இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 6 சக்திவிநாயகர்புரம் 5ம் தெருவில் சாலையின் மத்தியில் உள்ள மின்கம்பத்தை போக்குவரத்திற்கு இடையூறின்றி மின்வாரியத்தின் மூலம் மாற்றி அமைத்துக்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதி அளிக்கலாம்<br><br>இ3/1828/2013–1 | 25) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது |
| | | 26) மாமன்ற உறுப்பினர் திருமதி. முத்துமதி தெரிவித்த வேண்டுகோளின்படி இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 17 மற்றும் 18 ஆகியவற்றிற்கு தனியார் வாகனம் மூலம் விநியோகிகப்படும் குடிநீரின் அளவு பொதுமக்களின் பயன்பாட்டிற்குப் போதுமானதாக இல்லாததால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருவதைக் கருத்தில் கொண்டு, மேற்படி இரண்டு வார்டுகளுக்கும் கூடுதலாக ஒரு குடிநீர் லாரி மூலம் 25.01.2014 முதல் குடிநீர் விநியோகம் செய்திடவும், இதன் பொருட்டு ஏற்படும் செலவினத்திற்கும் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது. |
| | | 27) மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த வேண்டுகோளின்படி குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளான இம்மாநகராட்சி வார்டு எண்கள் 1, 2, 3, 5, 17, 18, 48, 49 மற்றும் 50 ஆகியவற்றிற்கு தனியார் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படும் காலம் 31.01.2014இல் முடிவுறும் நிலையில், அன்றைய தினத்தில் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டுள்ளது. பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டும், ஒப்பந்தபுள்ளி கோரப்படுவதால் ஏற்படும் கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டும், பொதுமக்களின் நலன்கருதியும், மேற்படி வார்டுகளில் தற்போது தனியார் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்து வரும் ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில் 01.02.2014 முதல் தொடர்ந்து ஆறு மாத காலம் குடிநீர் விநியோகம் செய்திட அனுமதி நீட்டித்து வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது. |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : 21.01.2014

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி